Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஓம் ஸ்ரீ

Pondicherry Atchaya

பாண்டிச்சேரி அட்சயா

(ஜாதக பரிவர்தனை கேந்திரம்)

கர வருஷத்திய பஞ்சாங்கம்

(2011 - 2012)

எமது பிரபல ஜோதிடர் திரு. K. சுந்தரராஜன் சர்மா அவர்களால் தொகுக்கப்பட்டது.

Cell : 94427 87344, 90927 52718

Editor & Publisher :

ஜெ. சந்தானம் ஐயர்

40, குயவர் வீதி, முருங்கப்பாக்கம், பாண்டிச்சேரி - 605 004.

பேசி : (0413) 2357543 Cell: 93454 16205

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

PRESIDENT COLLECTIONS
WALL ST TAILORS

WORLD WIDE MAIL ORDER SERVICE

LADIES & GENT'S CUSTOM TAILORS

Contact Person Manohar. C. Nanwani

E-Mail : presidentcollection@gmail.com

Indian Government Registed Company

www. presidentcollection.in



Shop : 259, J.N. Street,
Pondicherry. India.

Tel. 0413-4200366
Mob. : 93448 84210

Tin No. : 34730002341 /
Dt. 01.07.2007

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



அருள்மிகு சட்டைநாதர் (கால பைரவர்) சீர்காழி



பாண்டிச்சேரி

அம்சயா

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கர வருஷத்திய பஞ்சாங்கம்

உ

"Sri Chandramouleeswaraya Namaha :"

Sri Sankara Bhagavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta :

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

SRIMATAM SAMSTHANAM, No.1, Salai St., Kancheepuram - 631 502.
Ph. 044-27222115, 27233115 Fax : 27224305 E-mail : skmkanci@md.3vsnl.net.in

ஹிந்து மதம் என்றழைக்கப்படும் நமது ஸநாதன தர்மத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அன்றாட வாழ்வில் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருப்பது பஞ்சாங்கம். இது மானுட வாழ்வின் ஒரு அங்கம். வைதிகமான கர்மங்களில் அன்றாடப் பிரவிருத்திக்கு இன்றியமையாதது பஞ்சாங்கம்

காலை எழுந்தவுடன் பஞ்சாங்கம் பார்த்து விட்டுத்தான் தினசரி காரியங்களை ஆரம்பிப்பது என்பது நமது மரபு. காலை எழுந்தவுடன் பஞ்சாங்கம் பார்ப்பது கங்கா ஸ்நான பலன் தரும். திதி, வாரம் (கிழமை), நக்ஷத்திரம், யோகம், கரணம், என்ற ஐந்தையும் தெரிவிப்பது பஞ்சாங்கமே.

ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் வல்லுநரும் நமது ஸ்ரீமடத்தின் ப்ரிய சிஷ்யருமான ஸ்ரீ ஜெ. சந்தானம் ஐயர் மிகுந்த சிரத்தையுடன் எல்லோருக்கும் சரியான முறையில் பயன்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் எளிய முறையில் பாமரர்களும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் பஞ்சாங்கம் வெளியிடுவது அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

முஹூர்த்தங்கள், லக்னங்கள், கால, தேச நியமங்கள் போன்றவற்றை லௌகிகர்களும், சுலபமாக அறிந்து கொள்ளும் வண்ணம் எல்லோரும் கடைபிடிக்கக் கூடிய வகையில் இந்த பஞ்சாங்கத்தை நன்றாகத் திட்டமிட்டு வடிவமைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது

ஸ்ரீ ஜெ. சந்தானம் அவர்களால் வெளியிடப்படும் இந்த பஞ்சாங்கத்தை எல்லோரும் படித்துக் கால, தேச, புருஷ நியமங்களுக்குக் கட்டுப்பட்டு சாஸ்திர விஹிதமான கர்மங்களில் நம்பிக்கையுடன் ஈடுபட வேண்டுமாக ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீசந்த்ரமௌளீச்வரஸ்வாமி க்ருபை பூர்ணமாகக் கிடைக்க ஆசிர்வதிக்கிறோம்.

விக்ருதி பால்குண சுக்ல த்வாதசி
ஸ்ரீ சாங்கர ஸம்வத்ஸரம் 2520
காஞ்சீபுரம்.

நாராயணஸ்ம்ருதி:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ
ஸ்ரீ ராமஜெயம்
ஓம் நமோ பகவதே வாசுதேவாய தந்வந்தரயே அம்ருதகலச ஹஸ்தாய
ஸர்வ ஆமய விநாசநாய, த்ரைலோக்ய நாதாய, ஸ்ரீ மஹா விஷ்ணவே நம:

ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள்

ஸ்தாபகர் - பீடாதிபதி - நிர்வாகி
தன்வந்திரி ஆரோக்ய பீடம்

கீழ்புதுப்பேட்டை, அனந்தமலை மதுரா,
வாலாஜாபேட்டை 632 513. வேலூர் மாவட்டம், தமிழ்நாடு.
Phone : 04172 - 230033, Fax : 04172 - 232288, Cell : 94433 30203
Website. www.danvantriarokyapeedam.org
E.mail:danvantriarokyapeedam@yahoo.co.in

வாலாஜாபேட்டை

திரு. குலசேகரா J. சந்தானம் அவர்களுக்கு,

இந்து ஸனாதன தர்மத்தை சேர்ந்த அனைவருக்கும் அன்றாடம் பஞ்சாங்கத்தைப் பார்த்து அதில் கூறும் பலாபலன்களை அறிந்து அதன் வழி செல்கின்றனர் என்பது ஆண்டாண்டுகளாக நடந்து வருகின்றது. அத்தகைய பஞ்சாங்கத்தை கர ஆண்டில் **பாண்டிச்சேரி "அட்சயா"** சார்பில் வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மேற்கண்ட 'அட்சயா' இக்காலக் கட்டத்தில் சிறந்த முறையில், விளம்பரம் மற்றும் வியாபார நோக்கமின்றி, 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று எண்ணி ஜாதக பரிவர்த்தனையும் செய்து வருகிறது என்பது ஒரு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயமாகும். இது ஒரு பஞ்சாங்கம் மட்டும் அல்ல, பஞ்சகவ்யமும் கூட ஆத்ம சுத்திக்கு தேவையான அனைத்தும் இதில் அடங்கியுள்ளது. (ஸ்தோத்திரங்கள், ஆன்மீக விஷயங்கள், தர்மநெறிகள், அருட் பாடல்கள், மற்றும்). 'அட்சயா'வின் இந்த சமூக சேவை மேன்மேலும் தொடர, **ஸ்ரீ தன்வந்திரி பெருமாள்**, மற்றும் பரிவார தெய்வங்களையும் பிரார்த்தித்து விசேஷ பிரசாதங்களை அனுப்பியுள்ளேன்.

ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம் சக்தி

மஹாசக்தி

ஸ்ரீ ஆயிரம் கண்ணுடையாள் மஹாசக்தி பீடம்

T. புதுப்பட்டி, (P.O) சக்திபுரம், திருமங்கலம் தாலுக்கா,
மதுரை மாவட்டம். பேசி. 04549 329530.
செல் : 99941 27038, 09361279079

சித்தர்கள் பலர் வாழ்ந்த பூமியாம் வேதபுரி என்றழைக்கப்படும் புதுச்சேரியில் "பாண்டிச்சேரி அட்சயா" என்றழைக்கப்படும் ஜாதக பரிவர்த்தனை சேவையின் மூலம் அதன் ஆசிரியர் திரு. J. சந்தானம் அவர்களின் சீரிய முயற்சியாலும் கூட்டு வழிபாடுகளிலும், பல ஆன்மிக சேவைகளிலும் அவர் செய்த பல யாகங்களும், ஹோமங்களிலும் இன்றைய உலகில் பல ஆயிரக்கணக்கான திருமணங்கள் நடந்து வருவது கண்டு "ஸ்ரீ ஆயிரம் கண்ணுடையாள் மஹாசக்தி பீடம்" பரமானந்தம் அடைகிறது. ஒவ்வொரு மாதமும் மக்களுக்கு ஆற்றி வரும் உன்னதமான சேவைக்கும் அட்சயாவை படிக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

புதுச்சேரி மாநிலத்தில் புகழ் சேர்க்கும் விதத்தில் நாள்களையும், நவகோள்களையும் பார்க்க ஆயிரக்கணக்கானோர் பயனடைய செயற்கரிய செயல்களை செய்து வரும் சேவை செம்மல் திரு.J. சந்தானம் அவர்களும், அட்சயாவின் நிர்வாகிகளும் ஜோதிடரின் அறிய உழைப்பினால் வடிவமைக்கப்பட்டு வெளிவரும் இந்த தமிழ் புத்தாண்டு கர வருட பஞ்சாங்கம் நம் இந்துக்கள் ஒவ்வொருவரின் இல்லத்திலும் உள்ளத்திலும் இருந்து பஞ்ச அங்கமாக விளங்கி கற்பக மலர்களில் திகழ்ந்து மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் அருகே சக்திபுரத்தில் கம்பீரமாக 47அடி உயரமாக வீற்றிருக்கும் 'ஆயிரம் கண்ணுடையாளின்' தெய்வீக அருளாசியுடன். வளர்க !

(தவசக்தி ஓம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மா)
மஹாசக்தி பீடம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



உ

ஓம் சாரம் ஆறுபடையான் துணை

அருள்தரும் ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனுறை அருள்மிகு ஓம் ஆறுபடையான் திருக்கோயில்

சாரம் கிராமம், திண்டிவனம் வட்டம் - 604 307, விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.

தே. கர்ணன் அடிகளார்

சாரம் படையப்பா நகர் (லாரி பார்க் அருகில்), சாரம் அஞ்சல்,
திண்டிவனம் வட்டம். செல் : 94861 66986

சாரம்

12.03.2011

நிதானம் சாந்தம் அமைதி

பிரபஞ்சத்தின் பஞ்சபூத இயற்கை நிலைபாடுகளை அறிந்து வாழ்க்கையை வழிநடத்தி செல்ல உதவியாக இருக்கும் பஞ்சாங்கத்தை 12 ஆண்டுகளாக தொடர்ந்து மக்களுக்கு வழங்கி பணிஆற்றி வரும் J. சந்தானம் (நிறுவனர் பாண்டிச்சேரி அட்சயா) அவர்களுக்கு ஆறுபடையானின் திருவருள் கடாஷம்சம் என்றென்றும் கிடைக்க பெற வாழ்த்துகிறேன்.

பாண்டிச்சேரி அட்சயாவின் மூலம் இல்லறமாம் நல்லறத்திற்கு வழிகாட்டும் இருமனங்களை இணைக்கும் திருமணங்களை 1998ம் ஆண்டு முதல் 2500க்கு மேல் திருமணங்கள் முறையே நடைபெற்றிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய அம்சமாகும். அனைத்து திருமணங்களும் இறைவனின் திருஉள்ளத்தோடு நிகழப்பெற்ற சகாப்தமாகும். அவரின் பணி, இடையூறு இன்றி; நோய் நொடி இன்றி என்றும் இன்முகத்தோடு பணி செய்ய ஆறுபடையானின் திருவருள் கிடைக்க குருஅருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

ஆசியுடன்,

தே. கர்ணன் அடிகளார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

JAI SIVA SANKARA
JAI BHAVANI SANKARA

JAI SRI MOUNA GURU
JAI SRI LALITHA BHUVANESWARI MATHA

JAI GURU DATTA
JAI SAIRAM

His Holiness
Sri Ramananda Bharathi Swamigal

SRI MOUNANANDA THAPOVANAM
SRI SOWBHAGYA BHUVANESWARI PEETHAM

Cap :
120, Bharathidasan Street,
Ashok Nagar,
Pondicherry -8.

Pondicherry & Visakhapatinam * (A.P.)
Madhavardhara, Vuda Colony
M.I.G 193, D.No.: 39-33-24
Viskhapatinam - 530 008
99635 32728

நாராயண ஸ்ம்ருதி

மனிதர்களாகிய நாம் எந்த ஒரு செயலைச் செய்யத் துவங்கும் முன்னும், அதற்கு தகுந்த நேரம், காலம் பார்ப்பது மிக அவசியமாகும். அந்தச் செயலானது எவ்வித இடர்பாடுமின்றி, நல்ல சுபபலனை நல்குவதற்கு ஏற்ப, நல்லநாள், திதி, ஹோரை, யோகம் போன்ற அனைத்தும் ஒன்று சேர்ந்து பார்ப்பதற்கு எளிதான வகையில் அமைவதே பஞ்சாங்கமாகும்.

அத்தகைய பஞ்சாங்கத்தை புத்தகமாக, அனைவரும் படித்து பயனுறும் வகையில் சிறந்த ஸ்லோகங்களுடன் தயாரித்து மக்களுக்கு வருடந்தோறும் பிரசுரித்து தரும் மகத்தான தொண்டு செய்து வருபவர் "பாண்டிச்சேரி அட்சயா"-ன் ஆசிரியர் 'குலகேசரா' திரு. ஜெ. சந்தானம் ஐயர் மற்றும் ஜோதிஷ வித்வான் திரு. கே. சுந்தரராஜன் சர்மா ஆகியோர் ஆவர்.

பாண்டிச்சேரி அட்சயாவின் மூலம், இல்லறமாம் நல்லறத்திற்கு வழிவகுக்கும் இருமனங்களை இணைக்கும் திருமணங்களை இந்த புத்தகத்தின் மூலம் நடத்திவருகின்றனர். ஆசிரியரின் இந்த மேன்மைமிகு தொண்டு செயலானது பாரெங்கும் பரவி, தரணி முழுவதும் சிறந்து விளங்க வேண்டும்.

"அல்லவை தேய அறம்பொருள் நல்லவை
நாடி இனிய சொலின்" - குறள்

அறமும், நன்மையும், தரும் இனிய சொற்களை ஆராய்ந்து, ஒருவர் சொல்லும்போது, தீமைகள் விலகி அறம் பெருகும்.

இந்த மகத்தான தொண்டினைச் செய்து வரும், திரு. ஜெ. சந்தானம் அவர்களுக்கு எல்லாம் வல்ல குருநாதரும், ஸ்ரீ லலிதா புவனேஸ்வரி மாதாவும், ஸ்ரீ வாக்தேவியும் எப்போதும் நல்லாசிகள் வழங்கியருள வேண்டும் என மனதார பிரார்த்திக்கிறேன்

வாழ்க வையகம்! வளர்க தர்மம்!!

நாராயண! நாராயண! நாராயண!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-வது குரு மகா சன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803. (நாகை மாவட்டம்)
தொலைபேசி எண் : 04364-232021

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தேதி : 16.03.2011

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க.

அருள் வாழ்த்துரை

"இமையாதுயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி "

மனித வாழ்வு இயற்கையோடு இயைந்து நிற்பது சுந்தரரும்

"இயற்கையோ டியைந்த இன்பம்
இன்பத்தோடியைந்த வாழ்வு"

எனக்குறிப்பிட்டுள்ளார். பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே சித்தர்களும், ஞானிகளும் வானவியலையும், இயற்கையையும் கண்டுணர்ந்து சோதிடக்கலை, மருத்துவக்கலைகளை வளர்த்துள்ளனர். மனித வாழ்வு செம்மையாக நடந்தேற உறுதுணையாவது சோதிடமாகும். ஞானியர்கள் எழுதிவைத்த குறிப்புகள் மக்களது வாழ்க்கைக்கான படிநிலைகளாகும். அவர்களது ஆராய்ச்சியின் பயனாக அமைவதே ஐந்து அங்கங்கள் (பிரிவுகள்) உள்ளடக்கியதே **பஞ்சாங்கம்.**

நாள், கோள், ஓரை, பட்சம், திதி, நட்சத்திரம் முதலானவற்றையும் சுப, அசுப செய்திகளையும் தெளிவாக உணர்த்துவது **பஞ்சாங்கம்.** ஆண்டுதோறும் தமிழ்மாதப்பிறப்பில் அந்தாண்டுக்கான பஞ்சாங்கத்தை அச்சிட்டு வெளியிடுவது அரிய செயலாகும். அவ்வகையில் எதிர்வரும் தமிழ்ப்புத்தாண்டு "கர" வருட பஞ்சாங்கத்தை வெளியிடுவது சிறந்த மக்கள் தொண்டாகும். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும்'. கர வருட பஞ்சாங்கம் சிறந்த ஒன்றாக வெளிவரவும், மக்கள் அதனைப் பெற்றுப் பயனடையவும், நும்தொண்டு மேன்மேலும் வளர்ச்சி பெறவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடியை மனதில் வழுத்தி வாழ்த்துகிறோம்.

இணைப்பு : திருநீற்றுப்பிரசாதம்
பெறுநர் : திரு. J. சந்தானம் அவர்கள்
ஆசிரியர்-பாண்டிச்சேரி அட்சயா

திருவாவடுதுறை ஆதீனம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஸ்ரீ ராமஜெயம்

யோகி ராம்சூரத்குமார் ஜெயகுருராயா

மஹா பெரியவாள் அனுக்ரஹத்தில் பாண்டிச்சேரி அட்சயா ஜாதக பரிவர்தனை அமைப்பின் மூலம் பதிவு செய்துள்ள வரன்கள் மற்றும் வதுக்களுக்கு சீக்கிரமே விவாஹம் நடக்கவும், லோகம் க்ஷேமமாக இருக்கவும் எல்லாம் வல்ல தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டுகின்றேன்.

- ஆஸ்தீக அன்பர், சிதம்பரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எங்கள் நாடு ! எங்கள் வீடு ! எங்கள் குலதெய்வம்!

அருள்மிகு சட்டைநாதர் ஆலயம், சீர்காழி



நாகை மாவட்டம், சீர்காழியில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான பழைமை வாய்ந்த மிகப்பெரிய ஆலயம் சீர்காழி அருள்மிகு சட்டைநாதர் ஆலயம். இங்கு திருஞானசம்மந்தர் பெருமானுக்கு அம்பாள் ஞானபால் கொடுத்த தலமாகும். இங்கு அம்பாள் ஸ்திரசுந்தரி சமேத பிரம்மபுரிஸ்வரர் பெயருடன் பக்தர்கட்கு கண்கொள்ளா காட்சி அளித்து அருள்பாலிக்கிறார். ஆலயத்திற்கு மேலே ஸ்ரீ சட்டநாதருக்கு பிரதி வெள்ளிக்கிழமை (சுக்ரவாரம்) விசேஷ அர்ச்சனை, புனுகு சட்டம் சாத்தி உடைக்கப்படாத முழு தேங்காயும், நெய், வடமாலையும் தான் சுவாமிக்கு நிவேதனம் செய்யப்படுகிறது. கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாம் அருள்மிகு சட்டைநாதருக்கு (காலபைரவர்) நடைபெறும் வெள்ளிக்கிழமை விசேஷ பூஜையில் கலந்துகொண்டு பிரார்தனை செய்தால் வாழ்க்கையில் அனைவருக்கும் திருமணத்தடை நீங்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கம், தீராதநோய் நீங்கும், படிப்பில் மேன்மைபெற்று நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும், மற்ற எல்லா வளங்களையும் உடனுக்குடன் பெற்றிட இந்தப் புனிதமான ஆலயத்திற்கு வந்து வழிபாடு செய்தால் எல்லா நற்பலன்களும் கிட்டும் என்பது உண்மை. இந்த ஆலயத்தின் நிர்வாகிகளும், அர்ச்சகப் பெருமக்களும் இவ்வாலயத்தைச் சிறப்பாக நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

பிரதி வெள்ளிக்கிழமை சுக்ரவாரபூஜைக்கு ஆலயத்தில் ரூ.600 செலுத்தி முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். வெளியூரிலிருந்து வந்து தங்கும் பக்தர்கட்கு தங்க வசதியும் இவ்வாலயத்தில் உண்டு. நிர்வாகஸ்தர்களை முன்னதாக அணுகி பயனடையலாம். இரவில் 10 மணிக்கு விசேஷ அபிஷேகம், பூஜை ஆரம்பித்து 12 மணிக்கு அஷ்ட பைரவருக்கும் மஹாதீபாராதணை நடைபெறும். ஆலய பரம்பரை அர்ச்சர்கள் திரு. ராமுசிவாச்சாரியார், திரு.சோமசுந்தர சிவாச்சாரியார், திரு. ரிஷி சிவாச்சாரியார் மற்றும் ரமேஷ் ஹரிஹரன் அர்ச்சகர்களையும் ஆலய பேஷ்கர் திரு.திருஞானம் அவர்களையும் அணுகி அருள்மிகு சட்டைநாதரின் அருட்பிரசாதங்கள் பெற்றிடலாம்.

எம்மதத்தினரும் அவரவர்கள் குலதெய்வத்தினை வருடத்திற்கு ஒருமுறையாவது குடும்பத்துடன் தரிசனம் செய்து, விசேஷ பூஜைகள், பிரார்தனைகளை செய்து காணிக்கைகளை செலுத்தி, அன்னதானம் செய்தால் அவர்கள் சந்ததிகள் சுபிட்சம் அடைவார்கள், சுபகாரியங்கள் கைகூடும்.

தொகுப்பு : J. சந்தானம் அய்யர் (பாண்டிச்சேரி அட்சயா)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாழ்க பாரதம்!! ஜெய ஜெய சங்கர !

தலையங்கம்

வளர்க ஒற்றுமை!!! ஹர ஹர சங்கர !

எனதருமை வாசக நெஞ்சங்களே!

தைவாதீனம் ஜகத்சர்வம் மந்திராதீனந்து தைவதம்
தன் மந்ரம் ப்ராஹ்மணாதீனம் நீச்சயோ மமாதவ!

இந்த பிரபஞ்சம் யாவும் தெய்வங்கட்கு உட்பட்டது. தெய்வங்களோ மந்திரங்கட்கு கட்டுப்பட்டவை. அந்த மந்திரங்களோ பிராமணர்களுக்கு சர்வ சாதகம். இது சர்வ நிச்சயமான உண்மை என்ற நிதி சாஸ்திர வாக்கியங்கட்கு ஏற்ப பிராமணர்கள்தான், இவ்வுலகில் அனைத்து சத்காரியங்கட்கும், நற்காரியங்கட்கும் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும், ஏன்? காரண கர்தாவாகவும் இருந்து வருகிறார்கள். அந்தணர் என்போர் அறவோர் என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, அப்படிப்பட்ட அந்தண மரபில் வழிவந்த நான் இந்து சமூக மேம்பாட்டிற்காகவும், குறிப்பாக பிராமண சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் என்னாலும் எனது குடும்பத்தாலும் இயன்ற அளவில் பாண்டிச்சேரி அட்சயா என்ற ஜாதக பரிவர்த்தனை சேவை இதழ் வாயிலாக ஆற்றிவரும் சமூக சேவையானது இறைவனின் திருஅருளும், நல்லோரின் குருஅருளும் பரிபூரணமாக இருப்பதால்தான் செயலாக்க முடிகிறது எனலாம். அட்சயாவின் ஆசிரியராகிய நான், மிகவும் கற்றவனும் அல்ல. சிந்தனை ஆளரும் அல்ல. அரசியல் வாதியுமல்ல. சமூகத்தில் மிகுந்த அக்கரை கொண்டவன் என்பது மட்டும் விளங்கும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரின் பரிபூரண நல்ஆசி இருப்பதால்தான் தொடர்ந்து எமது நிர்மலமான சேவை பெரும்பாலான உறுப்பினர்களிடையே பரிமளிக்கிறது. இக்கலியுகத்தில் ஒவ்வொருவரும் நாம் ஏன் பிறந்தோம்! நாட்டுக்கு நலமென செய்தோம்! என்பதை சிந்திக்க நினைத்தாலேயே நமது பாரத தேசம் ஒரு வல்லரசு நாடக திகழலாம். அப்படி சிந்திக்காமல் சுயநல வாதிகளாகவும், சொத்து சேர்ப்பவர்களாகவும், சுரண்டல் பேர்வழிகளாகவும், சுருட்டல் மன்னர்களாகவும் மாறி வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இன்றைய நாளிதழ்களிலும், ஊடகங்களிலும் பார்கிறோம். தர்மம், நீதி, நேர்மை, பரோபகாரம், தெய்வ பக்தி போன்ற நற்பண்புகள் குறைந்து வருகின்றது. சகோதர நேயமும் வற்றிவருகிறது. நண்பர்களும் சுயநலத்துடன் பழகுவது நன்றாக தெரிகிறது. இதனால்தானோ! சுனாமி, பூகம்பங்கள், சூறாவளி போன்ற இயற்கை பேரழிவுகளை நாம் அடிக்கடி சந்திக்க நேரிடுகிறது. நல்ல சிந்தனை, நல்ல செயலர்கள், நல்ல நண்பர்கள், நல்ல ஜோதிடர்கள், நல்ல செயல்வீரர்கள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற பாண்டிச்சேரி அட்சயாவின் நிர்மலமான சேவை இன்று பல நல்ல குடும்பங்களை சேர்த்து வைக்கிறது. ஒரு நல்ல குடும்பம் ஓர் பல்கலை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கழகம் என்போர் பெரியோர். அந்த வகையில் பல ஆயிரக்கணக்கான திருமணங்கள் மூலம் குடும்பங்களை சேர்த்து வைத்து பல பல்கலை கழகமாக வளர்ச்சி பெற்றதும் பெரும் பாக்கியமாக கருதுகிறேன். இதுநாள் வரை அட்சயாவின் செயல்பாடுகளில் எவ்வித உள்நோக்கமோ! வியாபாரநோக்கமோ கிடையாது. எமது அமைப்பில் தரகர்களோ! புரோக்கர்களோ! ஏஜண்டுகளோ கிடையாது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சேவையாற்றுபவர்களோ எமது நிர்வாகிகள் 1998 ஆண்டு தொடங்கிய பாண்டிச்சேரி அட்சயா நாளுக்கு நாள் வளர்ந்து இன்று எழுச்சிமிகு 12ஆம் ஆண்டில் எடுத்து வைக்கும் நந்நாளில் எமது ஆயிரக்கணக்கான உறுப்பினர்கட்கும், நல்லோர்கட்கும், பெரியோர்கட்கும், குருமார்கட்கும், எனது உளமார்ந்த நன்றிதனை தெரிவிக்க கடமை பட்டிருக்கிறேன். இது நாள்வரை என்றுடன் தோள் கொடுத்து அட்சயாவை கட்டி காத்து ஒத்துழைப்பு நல்கிய சேவை செம்மல்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிதனை உரித்தாக்குகின்றேன். குருபார்க்க கோடி நன்மை என்பார்கள் பாண்டிச்சேரி அட்சயாவானது குருமஹா சன்னிதானங்களாலும், மஹான்களின் நேரடிப்பார்வை இருப்பதால்தான் பலசத்காரியங்களையும், நற்காரியங்களை செய்ய முடிகிறது. அட்சயா தொடங்கிய நாள் முதல் இதுநாள் வரை தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கிய கம்பன் மறுதோன்றி அச்சகத்தின் நிர்வாகி அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன். பஞ்சாங்கத்தில் அந்தந்த வருடத்தில் பாண்டிச்சேரி அட்சயா மூலம் ஆற்றிய சேவைகளையும், சாதனைகளையும் பட்டியலிட்டு காட்டுகின்றோம் கடந்த பல ஆண்டு போலவே இவ்வாண்டும் அட்சயா மூலம் வெளியிடும் தமிழ் புத்தாண்டு கர வருட பஞ்சாங்கம், பல லட்சக்கணக்கானோர் மதித்து போற்றப்படும் மலை போன்ற உயர்ந்த பீடத்தில் அமர்ந்துள்ள, கலியுகத்தின் நடமாடும் தெய்வமாகிய ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியின் திருக்கரங்களால் 03.04.2011 ஞாயிறு அன்று வெகு சிறப்பாக காஞ்சியில் வெளியிட்டு அனைத்து உறுப்பினர்கட்கும் இலவசமாக வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையர் திருமதி. நாகலஷ்மி ஜெகதீச அய்யர் (சிறுநாங்கூர்) அவர்களை வணங்கி எமது வழிபடு கடவுளாகிய சீர்காழி அருள்மிகு சட்டநாதர் (காலபைரவர்) திருவடியில் எமது எழுச்சிமிகு 12ஆண்டு படைப்பை காணிக்கையாக்குகின்றேன்.

வாழ்க வையகம்! வளர்க ஒற்றுமை!

ஜெய ஜெய சங்கரா!

என்றென்றும் சமூக சேவையில் அன்பன்

J. சந்தானம் ஐயர்

நிறுவனர், ஆசிரியர், பாண்டிச்சேரி அட்சயா

செல் : 93454 16205, போன் : 0413-2357543

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எமது பாண்டிச்சேரி அட்சயா மூலம் இதுநாள் வரை ஆற்றிய சேவைகளும், சாதனைகளும் :-

1. பாண்டிச்சேரி அட்சயா தொடங்கிய (1998)நாள்முதல் இது நாள்வரை எமது ஜாதக பரிவர்தனை சேவை மூலம் பிரசுரித்து நிச்சயமான வரன்கள் ஆகமொத்தம் 2396 திருமணங்கள். அதில். சென்ற வருடம் (விக்ருதி) வருடத்தில் மட்டும் சுமார் 176 திருமணங்கள் அதில் 51ஆண்கள் 125 பெண்கள் ஆகும்.
2. பாண்டிச்சேரி அட்சயா பஞ்சாங்கம் கடந்த 11 வருடமாக சிறப்பான முறையில் உறுப்பினர்கள் மற்றும் விளம்பர அன்பர்கள் பிரியமாக வாங்கி பயன்பெறும் வண்ணம் வெளியிட்டு அவர்கட்கு இலவசமாக வழங்கி வருவது நன்கு அறிந்ததே!
3. புதுவை மற்றும் தமிழகத்திலேயே மிக சிறப்பானதோர் திருமண சேவை மையத்தை நிறுவி அந்தணர். சமுகத்தினர்கட்கு மட்டும் ஓர் உன்னதமான சேவைமையமாகவும், சத்சங்கமாக செயலாற்றி இதன் வாயிலாக பல்லாயிரக்கணக்கான திருமண வைபவங்கள் நடைபெற்றிட ஓர் நல்வழித்தடமாக விளங்குகிறது **பாண்டிச்சேரி அட்சயா.**
4. நம் உறுப்பினர்களின் நலனைக்கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை பெற்றோர் சந்திப்பு கூட்டம் நடத்தி அந்தணர்களின் ஒற்றுமைக்கு வழி வகுக்கிறது. எவ்வித நுழைவு கட்டணமும் இதுநாள்வரை வசூலிப்பது கிடையாது. ஒருவரும் கட்டணம் செலுத்தியது கிடையாது. இதுவரை 131 மாதமாக பெற்றோர் சந்திப்பு நடைபெற்று அமோக வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.
5. நம் சமூகத்தில் இதுநாள் வரை திருமணம் ஆகாத ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண் வரன்கட்கும் 35 வயது மேற்பட்டு திருமணம் ஆகாத பெண்கள் இருந்தாலும், அவர்களின் பெற்றோர்கள் உரிய முயற்சி பணியை எடுக்க முடியாத சூழ்நிலையில் இருந்தாலோ உடன் அட்சயாவின் மூலம் இலவசமாக பிரசுரித்து பயனடைய ஆவன செய்து வருவது.
6. தமிழகத்தில் தாம்பிராஸ் மாத இதழும், தம்பிராஸ் வெளியிட்டுள்ள கிடைத்தற்கரிய பொக்கிஷமான அருந்தொண்டாற்றி வரும் அந்தணர்கள் (5பாகம்) என்ற நூலும் மற்றும் சென்னை S.S.S. B.T. சத்குரு சேஷாத்ரி சுவாமிகள் பிருந்தாவனம் டிரஸ்ட் சார்பில் வெளியிட்டுள்ள அருள்மிகு கிருஹலக்ஷ்மி திருவுருவபடமும், பூஜை முறை புத்தகமும் அட்சயாவின் உறுப்பினர் அனைவருக்கும்படி கிடைக்கும்படி செய்து வருவது.
7. நுகர்வோர் பாதுகாப்புக்காக நுகர்வோர் சட்டம், அதன் நோக்கம் குறித்து நம் உறுப்பினர்கட்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அரியாங்குப்பம் நுகர்வோர் கன்சியுமர் கவுன்சில் சார்பாக பொது விஷயங்களை மாதாமாதம் பிரசுரித்து வெளியிடுவது.
8. திருக்குற்றாலம் மௌன சுவாமி பீடத்தில் சித்தியாகி மக்களுக்கெல்லாம் அருள்பாலிக்கும் **ஸ்ரீஸ்ரீஸ்ரீசிவ சித்தானந்த பாரதி சுவாமிகள்** (ராஜ ராஜேஸ்வரி பீடம்) அவர்களின் திருக்கரத்தால் பாண்டிச்சேரி அட்சயா நிறுவனர் மற்றும் ஆசிரியர் ஸ்ரீமான் J. சந்தானம் அய்யர் அவர்கட்கு குலசேகரா என்ற கிடைத்தற்கரிய பட்டம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
9. விசாகப்பட்டினம் ஸ்ரீ மௌனனானந்த தபோவனம் (சித்தேஸ்வரிபீடம்) **ஸ்ரீஸ்ரீராமானந்த பாரதி சுவாமிகள்** அவர்களின் அருளாசிபடி பாண்டிச்சேரி அட்சயாவில் இதுநாள் வரை 131 மாதமாக TV பாலசுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்கள் மூலம் வேதகோஷமும் இணைஆசிரியர் ஸ்ரீரவீந்திரன் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனையும் தொடங்கி நடைபெற்று வருவது.
10. வேலூர் மாவட்டம் வாஜாஜாபேட்டை **தன்வந்திரி ஆரோக்ய பீடம் ஸ்தாபகர் ஸ்ரீ முரளிதர சுவாமிகளின்** அருளாசிபடி அட்சயா உறுப்பினர்கள் அனைவரும் ஜாதகம் பதியுமுன் தாய் தந்தைகள் ஆசி பெற்று, குலதெய்வத்தின் பிரார்த்தனை செய்ய சொல்லி கட்டாயம் வலியுறுத்துவது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

11. இதுநாள்வரை பாண்டிச்சேரி அட்சயா மூலம் நம் சமூகத்திற்காக ஆற்றிய சேவைகளையும், சாதனைகளை கருத்தில் கொண்டு நம் இந்து சமூகத்தின் மதகுருவும் கலியுகத்தின் நடமாடும் தெய்வமாகிய **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜெகத்குரு ஆச்சார்யாள் அவர்கள் அட்சயா ஆசிரியர் ஸ்ரீமான் சந்தானம் அய்யர் அவர்களுக்கு ஸ்ரீ மடத்தின் ப்ரிய சிஷ்யன்** என்ற கிடைத்தற்கரிய பட்டம் கொடுத்தது. அட்சய பாத்திரத்தின் மாபெரும் சாதனை என்று சொன்னால் மிகையாகாது. எமது தமிழ் புத்தாண்டு பஞ்சாங்கத்திலும் பிரசுபித்துள்ளோம்.
12. ஒவ்வொரு மாதமும் அட்சயாவுடன் இணைந்து நம் சமூகத்தினர்கட்கு சேவையாற்றும் தமிழகத்தில் உள்ள இதர ஜாதக பரிவர்தனை கேந்திரங்களையும், அறிமுகப்படுத்துவது, பிரபல ஜோதிடர்களையும் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது.
13. இந்தியாவிலேயே சிறந்த இருதய நோய் பிரிவு மகத்துவ மனையான **சென்னை மெட்ராஸ் (MMM) மெடிக்கல் மிஷன்** சிறந்த மருத்துவத்தை ஆயிரக்கணக்கான உறுப்பினரின் கவனத்திற்கு ஒவ்வொரு மாதமும் கவனப்படுத்துவது, நோயில் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அனுப்புவது.
14. புதுச்சேரி மாநிலத்திலேயே முதன்முறையாக **அ.மி. ரெட்டிப்பட்டி சுவாமிகளின் ஒருகோடி** அர்சனை சிறப்பாக நடக்கவும் அனைத்து அட்சயா உறுப்பினர்களை அழைத்து கோடி அர்ச்சனையில் கட்டாயம் கலந்து கொண்டு பயனடையவும் அன்னை அருள்சக்திக்கும் ரெட்டிப்பட்டி சுவாமிக்கும் நடந்த பிரம்மாண்டமான விழாவுக்கு சுமார் 3000 மேற்பட்ட குடும்பங்களை கலந்து கொள்ளவும் கோடி அர்ச்சனைக்கு பூரண ஒத்துழைப்பும் நல்கியதும் குறிப்பிடத்தக்கது.
15. மாதந்தோறும் **திண்டிவனம், சாரம் ஆறுபடையான் ஆலயத்தின் சிறப்பையும், மதுரை** மாவட்டம் திருமங்கலம் ஆயிரங்கண்ணுடையாள் அம்மாவின் சிறப்பையும், வேலூர் மாவட்டம் வாலாஜப்பேட்டை **ஸ்ரீ தன்வந்தரி ஆரோக்ய பீடத்தின் சிறப்பையும்,** திருநெல்வேலி, ரெட்டிப்பட்டி சுவாமிகளின் சிறப்பையும், திருவிடந்தை, திருமணஞ்சேரி, திருநல்லாறு, திருமண தடை நீக்கும் ஸ்தலத்தை ஆயிரக்கணக்கான உறுப்பினர்களின் கவனத்திற்கு மாதாமாதம் அறிமுகப்படுவது.
16. நம் சமூகத்தினர்கட்கு ஒவ்வொரு வருடமும் ஆவணி அவிட்டம், யஜுர் உபாகர்மம், காயத்ரி ஜெபம் அடங்கிய நோட்டீஸ் அமாவாசை தர்ப்பணம், பிரம்மம் யக்ஞம், வரலஷ்மி விரத பூஜை, விஷ்ணு சகஸ்ர நாமம் மந்திரங்களடங்கிய புத்தகமும் வழங்கி வருவது.
17. புதுவை மாநிலத்தில் 34 சித்தர்கள் ஜீவ சமாதி ஆன ஆலயங்களை ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கான உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்துவது.
18. இதுநாள் வரை பாண்டிச்சேரி அட்சயா மூலம் **ஸ்ரீதன்வந்திரி ஹோமம், ஸ்ரீலலிதா ஹோமம், சண்டிஹோமம், சுயம்வர பார்வதி ஹோமம், குருஹோமம், கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம்** ஆகியவை நடத்தி சாதனை படைத்தது.
19. பாண்டிச்சேரி அட்சயா தோன்றிய நாள் முதல் இது நாள் வரை **மூன்று ஆலயங்களுக்கு மஹா கும்பாபிஷேகம்** நடத்த முன்னிலை வகித்தது பாராட்டத்தக்கது. **ரெங்கப்ப ரெட்டிப்பாளையம் சக்திவேல் முருகன் ஆலயம் கும்பாபிஷேகம், ஸ்ரீ திண்டிவன வட்டம் சாரம் ஸ்ரீவள்ளி, தெய்வானை சமேத ஆறுபடையான் ஆலயம் கும்பாபிஷேகம்,** புதுச்சேரி ஒட்டம்பாளையம் **அருள்மிகு ஏழைமுத்து மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் ஆகும்.**
20. **ஸ்ரீ காஞ்சிபீடத்தின்** முக்கிய விசேஷங்களை அட்சயா மாத இதழில் பிரசுரித்து உறுப்பினர்களின் கவனத்திற்கு தவறாமல் கொண்டு செல்வது.
21. அண்மையில் தமிழ்நாட்டில் நடந்த தாம்பிராஸ் தலைவர் தேர்தலில் 4ம் முறையாக மாநில தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. நாராயணன் அவர்களை பாண்டிச்சேரி அட்சயாவின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சார்பில் பாராட்டி பொன்னாடை போற்றி ஆதரவு தந்தது (தேதி 30.05.2010)

22. பாண்டிச்சேரி அட்சயா மாத இதழ் மூலம் மத்திய தபால் தந்தி துறைக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு தபால்தலைகளை விற்பனை செய்து வருவது மாபெரும் சாதனை ஆகும்.

23. வேதபுரி என்னும் புதுவையில் சமஸ்கிருத வகுப்புகள் நடப்பதை நமது ஆயிரக்கணக்கான அந்தண உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வது.

24. பல கிடைத்தற்கரிய நூல்களையும், புத்தகங்களையும், அட்சயா மூலம் வாங்கி உறுப்பினர்கட்கு இலவசமாக வழங்கி வருவது. ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம், இந்து கலாச்சாரம், தீர்த்த பாலகர், சந்தியாவந்தனம், கடவுள் எங்கே! ஆத்ம விசாரம் ஆகிய கிடைத்தற்கரிய நூல்களை பெரியோர்களால் வெளியிட்டு வழங்கிவருவது.

25. ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள் ஏற்படுத்திய பிடி அரிசி திட்டத்தை பாண்டிச்சேரி அட்சயா மாத இதழ் மூலம் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து முழுமையாக பிடிஅரிசியை சேமித்து உரிய அன்னதான கூடத்தில் சேர்ப்பது (காஞ்சி மடம், தன்வந்திரி ஆரோக்ய பீடம்)

26. நம் சமூகத்தினரில் குறிப்பாக பெண்கள் வரன் மிகவும் குறைந்துவிட்டதால் பல பிள்ளைகளின் திருமணத்தை கருத்தில் கொண்டு பிராமண உறுப்பினர்களின் பெண்கள் வரனுக்கு நமது அட்சயாவின் மூலம் இலவச சேவைப்பிரிவை தொடங்கியது.

27. ஜாதகப் பரிவர்த்தனை சேவையில் பிராமணர்கள் அல்லது இதர சமூகத்தினர் நலன் கருதி அவர்களின் வேண்டுகோளின் பேரில் அவர்கட்கு குறைந்த கட்டணத்தில் ஜாதக பரிவர்த்தனை சேவை மையத்தை நிறுவி வரன் வதுக்களை பரிவர்த்தனை செய்ய அட்சயாவின் அங்கீகாரம் பெற்ற ஸ்ரீ கிரஹலக்ஷ்மி திருமண சேவை மையம் ஒன்றை தொடங்கி அதன் நிர்வாகி திரு. திருமேனி அவர்கள் மூலம் முருங்கப்பாக்கத்தில் சிறந்த சேவை மையம் திறப்பு விழா செய்தது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சபாபதி கோதண்டராமன் அவர்களும், அட்சயா ஆசிரியர் திரு. J. சந்தானம் அவர்கள் தலைமையில் தொடங்கி இயங்கி வருகிறது. ஜாதி மதபேதமின்றி ஏழை மாணவ, மாணவியரை படிக்க வைக்க உதவி செய்வது.

– ஆசிரியர்

Aspiration, Prayer, Bakthi, Love, Surrender are the main supports of this part of the Sadhana..." -The Mother



பாண்டிச்சேரி அட்சயா என்றும் வீறுநடை போட வாழ்த்துக்கள்...

ஸ்ரீ. ரவீந்திரன்
காமாட்சி ரவீந்திரன்
சுபஸ்ரீ-சுவாமிநாதன்
எண்.9, வ.உ.சி லேன், ஐயனார் நகர்,
சாரம், புதுச்சேரி-13. செல் : **98654 57652**

ஸ்ரீ அரவிந்தர் சுடர்

இறைவன் என்ற புதிருக்கு அவனே விடை. வாழ்வில் இறைவன் புதிர். அவனை அடைந்தால் விடை எழும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாண்டிச்சேரி அட்சயா நிர்வாகிகள்



"குலசேகரா"

திரு. ஜெ. சந்தானம் ஐயர், AFT, (Retd.)

ஆசிரியர்- பாண்டிச்சேரி அட்சயா

முன்னாள் செயலர்- பாண்பிராஸ்,

திருமதி. சாவித்திரீ சந்தானம்

40, குயவர் வீதி, முருங்கப்பாக்கம்,

புதுச்சேரி-4

பேசி: (0413) 2357543 Cell: 93454-16205

திருமதி. பத்மாவதி சுப்பராமன்

கொள்கை பரப்பு செயலாளர்,

திரு. M.N. சுப்பராமன், AFT(Retd)

"பத்மம்"

22, இரண்டாவது குறுக்குத் தெரு,

வாய்க்கால் தெரு, அனிதா நகர் விரிவு,

முதலியார்பேட்டை, புதுச்சேரி-4.

பேசி : 0413 - 2358635.

திரு. ஸ்ரீ ரவீந்திரன், AFT

இணை ஆசிரியர்

எண்.9, வ.உ.சி. லேன்

ஐயனார் நகர், சாரம்

புதுச்சேரி-13

செல் : 98654 57652

திரு. S. ரமேஷ்

எண்.296, 4வது நடுத்தெரு

அன்னை இந்திரா வீதி,

குறிஞ்சி நகர், புதுச்சேரி-8

செல் : 090039 23959

098940 60193

எமது பிரபல ஜோதிடர்

திரு. K. சுந்தரராஜன் சர்மா

முதல் குறுக்குத் தெரு,

1, பாரதிதாசன் நகர், மாடி

முதலியார்பேட்டை,

புதுச்சேரி-4.

செல் : 94427 87344, 90927 52718

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

ஸ்ரீ முருகன் துணை

ஜோதிடர் பக்கம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே - நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா ! - *ஔவையார்*

மங்களகரமான எமது "பாண்டிச்சேரி அட்சயாவின் **கர** வருஷ பஞ்சாங்கம் வாக்கிய கணித அடிப்படையில் ஜோதிஷ மற்றும் ஆன்மீக விஷயங்களுடன் தொகுத்துள்ளேன். ஆய கலைகள் 64ல் ஒன்றும் வேதத்தின் அங்கங்களில் ஒன்றுமான ஜோதிடக் கலையில் ஆர்வத்தை உருவாக்கிய எனது தந்தையும், ஆசானுமான புதுக்கோட்டை **Late A.N.** கிருஷ்ணமூர்த்தி அய்யர் எனது தாயார் திருமதி. லக்ஷ்மி அம்மாள் இவர்களின் பரிபூரண ஆசீர்வாதத்துடனும், எனது அன்பிற்கும், பெருமதிப்பிற்குரிய "பாண்டிச்சேரி அட்சயா" இதழ் ஆசிரியர் உயர்திரு "குலசேகரா" **J. சந்தானம் அய்யர்** - திருமதி. **சாவித்ரி சந்தானம்**, பத்மா சுப்பராமன் - **M.N.** சுப்பராமன் தம்பதியர் மற்றும் இணை ஆசிரியர் **S.** ரவீந்திரன் திரு. **S.** ரமேஷ் இவர்களின் ஈடு இணையற்ற ஒத்துழைப்புடனும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு சங்கராச்சாரியார் மற்றும் பாலபெரியவர் பூரண நல்லாசியுடனும் வெளிவருகிறது. எமது படைப்பில் 12வது ஆண்டாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் தொகுத்து அளிப்பதில் மிகப்பெரும் பாக்கியமாக எண்ணி மகிழ்கிறேன். இதில் குறைகளோ, தவறுகளோ இருப்பின் எனது கவனத்திற்கு உடனடியாக அன்பர்கள் கொண்டு வந்தால் அடுத்த பஞ்சாங்கம் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நன்றி !

என்றும் அன்புடன்,

ஜோதிடர். **K. சுந்தரராஜன் சர்மா.**

செல் : **94427 87344, 90927 52718**

சுபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீராமஜெயம் ஸ்ரீ விநாயகர் துணை ஸ்ரீ நவக்கிரஹ தேவதா ஸகாயம்

ஸ்ரீ குருப்யோ நம : பரப்பிரம்மணே நம :

கர வருஷ பஞ்சாங்கம் (2011 - 2012)

புதன் செவ் குரு	சூரியன்		ல / கேது
சுக்கிரன்	கர வருட ஜகத் ஜாதகம் இராசி		
			சந்தி
ராகு			சனி

ல /	சூரியன் ராகு	சுக்கிரன் சனி	சந்திரன்
குரு	நவாம்சம்		
	செவ்	கேது	புதன்

கர வருட கத வர்த்தமான வருஷங்கள்

பிரபவாதி	- 25
இந்திய குடியரசு	- 61 - 62
ஸ்ரீ காந்தியப்தம்	- 141 - 142
ஸ்ரீ ராமதேவாப்தம்	- 738
கதசாலிவாஹனம்	- 1933 - 34
ஹிஜ்ரி	- 1432 - 33
பஸலி	- 1420 - 21
கொல்லம்	- 1186 - 87
வர்த்தமானதிருவள்ளுவர்	- 2042 - 43
விக்ரம சகாப்தம்	- 2067 - 68
கத கலியப்தம்	- 5112
சேஷகலி	- 4.26-888
ஸ்ரீ சங்கராச்சாரியார்	- 2082
தென் இந்தியா கர	- 26

கர வருட வெண்பா பலன் :

கர வருஷம் மாரி பெய்யும் காசியினியு
முய்யும்
உரமிகுத்து வெள்ள மெங்கும் ஓடும்
நிறைமிகுத்து
நாலுகால் ஜீவன் நலியும் நோயான் மடியும்
பாலும் நெய்யுமே சுருங்கும் பார்.

பலன் : புயல் காற்றுடன் மழையும் நாலுகால் உயிரினங்கள் பாதிப்பும், பால், தயிர் வெண்ணெய் உற்பத்தி கடுமையான பாதிப்பும் அதிக விமான விபத்துக்களும், மக்களுக்கு நிம்மதியின்மையும் அமையும்.

மங்களகரமான **கர வருஷம்** சித்திரை மாதம் முதல் தேதி (14.04.2011) வியாழக்கிழமை பகல் மணி 11.50 க்கு மிதுன லக்னம், மகம் நட்சத்திரம் சிம்ம ராசி கூடிய சுபதினத்தில் கர வருஷ தமிழ்ப் புத்தாண்டு மங்களகரமாக பிறக்கிறது.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து!
சர்வே ஜனோ சுகினோ பவந்து !

சுபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai





கர வருஷத்திய ஆதாய-விரய விபரங்கள்

ராசிகள்	ஆதாயம்	விரயம்	ஆரோ	அனா	ராஜபூஜிதம்	ராஜகோபம்	சுகம்	துக்கம்
மேஷம், விருச்சிகம்	5	11	5	1	2	6	3	3
ரிஷபம் துலாம்	14	2	2	5	1	2	6	3
மிதுனம் கன்னி	2	2	4	6	5	6	3	3
கடகம்	2	8	1	2	6	3	3	3
சிம்மம்	14	8	6	5	6	3	3	3
தனுசு மீனம்	8	2	3	2	1	2	6	3
மகரம் கும்பம்	11	11	4	4	2	6	3	3
மொத்தம்	56	44						

இவ்வாண்டு ஆதாயம் 56 - விரயம் 44 = அதிகம் 12

பண வீக்கம் குறைந்து பொருளாதார முன்னேற்றம் அமையும், தொலைத் தொடர்பு மின் சாதன பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கும். தொழில் மேன்மை உண்டு.

சுபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கர வருட நவ நாயகர்கள் பலன்

இராஜா, சந்திரன் : நாட்டில் பொருளாதார வளர்ச்சியும், செழிப்பும் இருக்கும். மத்திய, மாநில அரசுகளுக்கு பாதிப்பும் நிலையற்ற தன்மையும் இருக்கும். விலை வாசி குறையும்.

மந்திரி, குரு : மாணவ மாணவிகளுக்கு, கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும். கால் நடைகளுக்கு பல நோய்களும் கட்டு மான பணியில் மந்தமும் இருக்கும். மக்களுக்கு சுபிட்சம்.

அர்க்காதிபதி புதன் : பேப்பர், அட்டை, பஞ்சு விலை உயரும் அயல்நாட்டு வியாபார ஏற்றுமதி இறக்குமதி முன்னேற்றம் உண்டு. ஆடம்பர பொருட்கள் விலை குறையும். தொழில் அதிபர்களுக்கு பொருளாதார பிரச்சனைகள் ஏற்படும்.

மேகாதிபதி புதன் : புயலுடன் நல்ல மழை பொழியும். நாட்டில் தண்ணீர் பிரச்சனை தீரும். புதை பொருள் கிடைக்கும்.

ஸஸ்யாதிபதி சூரியன் : இந்த வருஷம் பூமி அதிக வெப்பம் அடையும். வாகன விபத்துக்கள் அதிகம். வாசனைப் பொருட்கள் விலை குறையும். அனுமின் நிலையங்கள் பாதிக்கும்.

சேனாதிபதி புதன் : ராணுவம் மிகவும் விழிப்புடன் இருக்கும். நவீன ஆயுதத் தயாரிப்பு அதிகம். நிலக்கரி பற்றாக்குறை ஏற்படும்.

இரஸாதிபதி செவ்வாய் : சர்க்கரை, மற்றும் இனிப்பு பொருட்கள் விலை திடீரென்று ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும்.

தான்யாதிபதி : சுக்கிரன், நெல், அரிசி விலை உயரும். மஞ்சள் விலை உயர்ந்து தேங்காய் விலை குறையும், ஏறும்.

நீரஸாதிபதி : இரும்பு, ஈயம் அதிகமாக கிடைக்கும். மின்சார பாதிப்பு ஏற்படும். பெட்ரோல் டீஸல் விலை மிகவும் உயரும்.

பசு நாயகர் கோபாலன் : சூறாவளி காற்றும், இடி மின்னலும் அதிகம் காடுகள் பாதிக்கும்.

ஷண்மண்டல பலன் : பொதுவாக மக்களுக்கு சுபிட்சம் உண்டு.

கந்தாயம்

அஸ்வினி	4.2.4	மகம்	7.2.1	மூலம்	2.2.3
பரணி	7.0.2	பூரம்	2.0.4	பூராடம்	5.0.1
கார்த்திகை	2.1.0	உத்திரம்	5.1.2	உத்திராடம்	0.1.4
ரோகிணி	5.2.3	ஹஸ்தம்	0.2.0	திருவோணம்	3.2.2
மிருகசீரிஷம்	0.0.1	சித்திரை	3.0.3	அவிட்டம்	6.0.0
திருவாதிரை	3.1.4	சுவாதி	6.1.1	சதயம்	1.1.3
புனர்பூசம்	6.2.2	விசாகம்	1.2.4	பூரட்டாதி	4.2.1
பூசம்	1.0.0	அனுஷம்	4.0.2	உத்திரட்டாதி	7.0.4
ஆயில்யம்	4.1.3	கேட்டை	1.1.0	ரேவதி	2.1.2

முதல் 0க்கு 4 மாதங்கள் வியாதி, இரண்டாவது 0க்கு அடுத்த 4 மாதங்கள் கடன். மூன்றாவது 0 க்கு 4 மாதங்கள் சமம். மூன்றிலும் 0 இல்லாமல் இருந்தால் மிகவும் நன்மையாகும். ஒற்றை இலக்கம் ஆயின் நன்மை, இரட்டை இலக்கம் ஆயின் சமபலன்.

- சுபம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மகர சங்கராந்தி ஜென்ம நக்ஷத்திர பலன்கள்

உத்திரம், ஹஸ்தம், சித்திரை தன நாசம். சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், தனலாபம். உத்ராடம், திருஓணம், அவிட்டம் ஸ்தான சலனம். சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அஸ்வினி பரணி ஸ்தான லாபம். கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிஷம், ராஜகோபம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் இராஜ வெகுமானம்.

பொங்கல் வைக்க !



கர வருஷ மகர சங்கராந்தி பலன் : கர வருஷம் தை மாதம் முதல் நாள் (15.01.2012) ஞாயிற்றுக்கிழமை ஹஸ்த நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 8.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் சுக்கிர ஹோரையில் புதுபானை புது அடுப்பில் வைத்து 'பொங்கலோ பொங்கல்' என்று கூவி அவரவர் சம்பிரதாயப்படி செய்து கொள்ளவும்.

கர வருஷ மழை விபரம் : இந்த ஆண்டு ஐப்பசி கார்த்திகை, மார்கழி மாதங்களில் நல்ல மழையும், ஆனி புரட்டாசி மாதத்தில் மிதமான மழையும் உண்டு. பருவ மழை சரியான நேரத்தில் பெய்யும்.

மகரசங்கராந்தி

நாம பலன் : பிராம்மணர்களுக்கு சௌக்கியம்

வஸ்திர பலன்	- சுபிட்சம்	வாகன பலன்	- சூத்திரர்க்கு பீடை
கந்த பலன்	- கலகம்	வாத்ய பலன்	- பிரபுக்களுக்கு பீடை
புஷ்ப பலன்	- பீடை	ஆயுத பலன்	- பயம்
ஆபரண பலன்	- உலகபயம்	திக்கு பலன்	- அனைவருக்கும் நன்மை
பாத்திர பலன்	- அனாவிருஷ்டி	வார பலன்	- வியாதி, பயம்
போஜன பலன்	- எருமை நாசம்	கால பலன்	- பசுக்களுக்கு பீடை
ஸ்நான பலன்	- ராஜாக்களுக்கு பீடை	நட்சத்திர பலன்	- மத்யமம்
		லக்ன பலன்	- சமம்

கர வருஷ நவ நாயகர்கள்

ராஜா - சந்திரன்	1. ராஜா - குதிரைகளுக்கும்
மந்திரி - குரு	2. மந்திரி - யானைகளுக்கும்
அர்க்காதிபதி - புதன்	3. அர்க்காதிபதி - பறவைகளுக்கும்
மேகாதிபதி - புதன்	4. மேகாதிபதி - வருஷங்களுக்கும்
ஸஸ்யாதிபதி - சூரியன்	5. ஸஸ்யாதிபதி - பிரஜைகளுக்கும்
சேனாதிபதி - புதன்	6. சேனாதிபதி - பசுக்களுக்கும்
இரஸாதிபதி - செவ்வாய்	7. இரஸாதிபதி - சர்ப்பங்களுக்கும்
தான்யாதிபதி - சுக்ரன்	8. தான்யாதிபதி - ஒட்டகங்களுக்கும்
நீரஸாதிபதி - சனி	9. நீரஸாதிபதி - கிரஹங்களுக்கும்
பசுநாயகர் - கோபாலன்	பசுநாயகர் - நான்கு கால் ஜீவராசிகளுக்கும்
வருஷ தேவதை - சனி பகவான்	வனவிலங்குகளுக்கும் அதிபதிகளாவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ராசிகள் -12	:	மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.
யுகங்கள் -4	:	கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், **கலியுகம்**
வருஷங்கள்-7	:	பாரத வருஷம், கிம்புருஷ வருஷம், ஹரி வருஷம், இளாவ்ருத வருஷம், ரம்மிய வருஷம், ஐரண வருஷம், குரு வருஷம்.
சகாப்தங்கள்-8	:	பாண்டவ சகாப்தம், சாலிவாகன சகாப்தம்,விக்ரம சகாப்தம், போஜராஜ சகாப்தம், கொல்ல சகாப்தம், ராமதேவ சகாப்தம், பிரதாபருத்திர சகாப்தம், கிருஷ்ணதேவராய சகாப்தம்.
அயனங்கள்-2	:	உத்தராயணம் - தை முதல் ஆனி மாதம் வரை தக்ஷிணாயணம் - ஆடி முதல் மார்கழி மாதம் வரை.
ருதுக்கள்-6	:	(சித்திரை, வைகாசி - வஸந்த ருது), (ஆனி,ஆடி-கிரீஷ்ம ருது). (ஆவணி, புரட்டாசி-வர்ஷ ருது), (ஐப்பசி, கார்த்திகை-சரத் ருது), (மார்கழி, தை-ஹேமந்த ருது), (மாசி, பங்குனி- சிசிர ருது).
திதிகள்-15	:	பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி (அ) அமாவாசை.
கரணங்கள்-11	:	பவம்-சிங்கம், பாலவம்-புலி, கௌலவம்-பன்றி, தைதுலம்-கழுகு, கரசை-யானை, வணசை-எருது, பத்திரை-கோழி, சகுனி-காக்கை, சதுஷ்பாதம்-நாய், நாகவம்-பாம்பு, கிம்ஸ்துக்னம்-புழு.
யோகங்கள்-27	:	விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்யம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், துருதி, சூலம், கண்டம், விருத்தி, த்ருவம், வியாகாதம், ஹர்ஷணம், வஜ்ரம், ஸித்தி,வியதீபாதம், வரீயான், பரீகம், சிவம், ஸித்தம், சாத்தியம், சுபம், சுப்ரம், பிராம்யம், மாகேந்திரம், வைதிருதி.
வேளைகள்-3	:	சாத்வீகம், தாமஸம், ராஜஸம்
குளிகாதியர்-9	:	காலன், அர்த்தப்ரகரன், எமகண்டன், துன்மதனன், தூமகேது, இந்திர தனுசு, குளிகன், பரிவேடன், வியதீபாதன்
சுப-அசுப வாரம்	:	வெள்ளி, வியாழன், புதன், திங்கள், இவை சுப வாரம். மற்றவை அசுப வாரம். இவற்றுள் ஞாயிறு உத்தமம்.
வாரங்கள்-7	:	ஞாயிறு- பானுவாசரம், திங்கள்- இந்துவாசரம், செவ்வாய்- பௌமவாசரம், புதன்- சௌமியவாசரம், வியாழன்- குருவாசரம், வெள்ளி- ப்ருகுவாசரம், சனி-மந்தவாசரம் (அ) ஸ்திரவாசரம்.

வளர்பிறை - பூர்வபக்ஷம் அல்லது சுக்கிலபக்ஷம்.
தேய்பிறை - அமரபக்ஷம் அல்லது கிருஷ்ணபக்ஷம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நக்ஷத்திரம்-கணம்-ரஜ்ஜு-தேவதை-வேதை-ஸமஸ்க்ருத பெயர் - நாம அட்சரம்

நக்ஷத்திரம்	கணம்	ரஜ்ஜு	அதிதேவதை	வேதை	ஸமஸ்கிருத பெயர்	நாமஅட்சரம்
அஸ்வினி	தேவ	பாதம்	சரஸ்வதி	கேட்டை	அஸ்வினி	சு,சே,சோ,ல
பரணி	மனுஷ	தொடை	துர்க்கை	அனுஷம்	அபரணி	லி,லூ,லே,லோ
கார்த்திகை	ராக்ஷச	நாபி	அக்னி	விசாகம்	கிருத்திகா	அ,இ,உ,எ
ரோஹிணி	மனுஷ	கண்ட	பிரம்மன்	சுவாதி	ரோகிணி	ஒ,வ,வி,வு
மிருகசீரிஷம்	தேவ	சிரசு	சந்திரன்	சித்திரை	மிருகசீரா	வே,வோ,கா,கி
திருவாதிரை	மனுஷ	கண்ட	பரமசிவன்	திருவோண	ஆருத்ரா	கு,க,ஞ,ச
புனர்பூசம்	தேவ	நாபி	அதிதி	உத்திராடம்	புனர்வஸு	கே,கோ,ஹ,ஹி
பூசம்	தேவ	தொடை	ப்ருகஸ்பதி	பூராடம்	புஷ்ய	ஹீ,ஹே,ஹோ,ட
ஆயில்யம்	ராக்ஷஸ	பாதம்	ஆதிசேஷன்	மூலம்	ஆஷ்லேஷா	டி,டு,டே,டோ
மகம்	ராக்ஷஸ	பாதம்	சுக்கிரன்	ரேவதி	மகா	ம,மி,மு,மே
பூரம்	மனுஷ	தொடை	பார்வதி	உத்திரட்டா	பூர்வபல்குனி	மோ,ட,டி,டு
உத்திரம்	மனுஷ	நாபி	சூரியன்	பூரட்டாதி	உத்ரபல்குனி	டே,டோ,ப,பி
ஹஸ்தம்	தேவ	கண்ட	சாத்தான	சதயம்	ஹஸ்த்தா	பு,ஷ,ந,ட
சித்திரை	ராக்ஷஸ	சிரசு	விஸ்வகர்மா	அவிட்டம்	சித்திரா	பே,போ,ர,ரி
சுவாதி	தேவ	கண்ட	வாயு	ரோகிணி	ஸ்வாதி	ரு,ரே,ரோ,த
விசாகம்	ராக்ஷஸ	நாபி	குமரன்	கார்த்திகை	விசாகா	தி,து,தே,தோ
அனுஷம்	தேவ	தொடை	லக்ஷ்மி	பரணி	அனுராதா	ந,நி,நு,நே
கேட்டை	ராக்ஷஸ	பாதம்	இந்திரன்	அஸ்வினி	ஜ்யேஷ்டா	நோ,ய,இ,யு
மூலம்	ராக்ஷஸ	பாதம்	அசுரன்	ஆயில்யம்	மூலா	யே,யோ,ப,பி
பூராடம்	மனுஷ	தொடை	வருணன்	பூசம்	பூர்வாஷாடா	பூ,த,ப,ட
உத்திராடம்	மனுஷ	நாபி	கணபதி	புனர்பூசம்	உத்ராஷாடா	பே,போ,ஜ,ஜி
திருவோணம்	தேவ	கண்ட	விஷ்ணு	திருவாதிரை	ச்ரவண	கி,கு,கே,கோ
அவிட்டம்	ராக்ஷஸ	சிரசு	வசுக்கள்	மிருகசீரிஷம்	ச்ரவிஷ்டா	க,கீ,கு,கூ.கே.
சதயம்	ராக்ஷஸ	கண்ட	யமன்	ஹஸ்தம்	சதபிஷக்	கோ,ஸ,ஸி,ஸு
பூரட்டாதி	மனுஷ	நாபி	குபேரன்	உத்திரம்	பூர்வாபாத்ரா	ஸே,ஸோ,தா,தி
உத்திரட்டாதி	மனுஷ	தொடை	காமதேனு	பூரம்	உத்ராபாத்ரா	து,ஞ,ச,த, ஸ்ரீ
ரேவதி	தேவ	பாதம்	சனி	மகம்	ரேவதீ	தே,தோ,ச,சி

நேத்திரம், ஜீவன் பற்றி : நேத்திரம், ஜீவன் இரண்டும், சூரிய கதியை ஒட்டி நக்ஷத்திர பலன்களை பற்றித் தெரிவிப்பன நேத்திரம் -2 உத்தமம், 1- மத்யமம், 0-அதமம் இதே போன்று ஜீவன் 1-உத்தமம், ½-மத்யமம், 0-அதமம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

நவக்கிரஹங்கள்

கிரஹம்	திக்கு	தேவதை	ரத்தினம்	தானியம்	புஷ்பம்	சமித்து	வஸ்திரம்	தூபதீபம்	ராசி காலம்
சூரியன்	நடு	சிவன்	மாணிக்கம்	கோதுமை	செந்தாமரை	எருக்கு	சிவப்பு	சந்தனம்	1 மாதம்
சந்திரன்	வடமேற்	பார்வதி	முத்து	பச்சரிசி	வெள்ளல்லி	முருக்கு	வெண்மை	சாம்பிராணி	2¼ நாள்
செவ்வாய்	தெற்கு	கந்தன்	பவழம்	துவரை	செண்பகம்	கருங்காலி	பவளநிறம்	குங்கிலியம்	1½ மாதம்
புதன்	வடகிழ	விஷ்ணு	பச்சை	பச்சையிறு	வெ.காந்தள்	நாயுருவி	பச்சை	கற்பூரம்	1 மாதம்
குரு	வடக்கு	பிரம்மா	புஷ்பராகம்	கடலை	முல்லை	அரசு	பொன்னிறம்	ஆம்பல்	1 வருஷம்
சுக்கிரன்	கிழக்கு	லக்ஷ்மி	வைரம்	மொச்சை	வெ.தாமரை	அத்தி	வெண்பட்டுநிறம்	லவங்கம்	1 மாதம்
சனி	மேற்கு	சாஸ்தா	நீலம்	எள்ளு	கருங்குவளை	வன்னி	கறுப்பு	கருங்காலி	2½ வருஷம்
ராகு	தெ.மேற்	பத்திரகாளி	கோமேதகம்	உளுந்து	மந்தாரை	அறுகு	புள்ளியுடை சிவப்பு	கடுகு	1½ வருஷம்
கேது	வட.மேற்	விநாயகர்	வைடூரியம்	கொள்ளு	செவ்வல்லி	தர்ப்பை	பலநிறங்கள்	செம்மரம்	1½ வருஷம்

கிரஹம்	காரகத்துவம்	அங்கங்கள்	வடிவம்	வாகனம்	ஸ்தானம்	தசை	பார்வை	லக்ன மறைவு
சூரியன்	தந்தை	தலை	சதுரம்	ரதம்	காடு	6 வரு	7	8,12
சந்திரன்	தாய்	முகம்	வட்டம்	முத்துவிமானம்	ஜலம்	10 வரு	7	3,6,8,12
செவ்வாய்	சகோதரன்	மார்பு	டமருகம்	ஹம்ஸம்	பூமி	7 வரு	4,7,8	8,12
புதன்	மாமன்	இடை-முதுகு	அறுகோணம்	குதிரை	உயர்ந்தஇடம்	17 வரு	7	3,6,8,12
குரு	புத்திர்	வயிறு	நெடும்வட்டம்	யானை	நகரம்	16 வரு	5,7,9	3,6,8,12
சுக்கிரன்	களத்திரம்	மர்மஸ்தானம்	எண்கோணம்	கருடன்	ஜலக்கரை	20 வரு	7	3,8
சனி	ஆயுள்	தொடைபாதம்	வில்வடிவம்	காகம்	பழையஉஷ்	19 வரு	3,7,10	8,12
ராகு	பாட்டன்வழி	கைகள்	மாலை	ஆடு	சேரி	18 வரு	7	8,12
கேது	ஞானம்	கால்கள்	முறம்	சிம்மம்	சேரி	7 வரு	7	8,12

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இங்கிலீஷ் மாதம்	தமிழ் மாதம்	சங்கற்ப மாதம்	ஸம்ஸ்க்ருத மாதம்
ஜனவரி	சித்திரை	சைத்ரம்	மேஷம்
பிப்ரவரி	வைகாசி	வைசாகம்	ரிஷபம்
மார்ச்	ஆனி	ஜேஷ்டம்	மிதுனம்
ஏப்ரல்	ஆடி	ஆஷாடம்	கடகம்
மே	ஆவணி	சிரவணம்	சிம்மம்
ஜின்	புரட்டாசி	பாத்ரபதம்	கன்னி
ஜூலை	ஐப்பசி	ஆஸ்வீனம்	துலாம்
ஆகஸ்ட்	கார்த்திகை	கார்த்திகம்	விருச்சிகம்
செப்டம்பர்	மார்கழி	மார்கசிரம்	தனுசு
அக்டோபர்	தை	புஷ்யம்	மகரம்
நவம்பர்	மாசி	மாகம்	கும்பம்
டிசம்பர்	பங்குனி	பால்குணம்	மீனம்

யோகங்கள்

நக்ஷத்திரம்	ஞா	திங்	செவ்	புத	வியா	வெ	சனி	நக்ஷத்திரம்	ஞா	திங்	செவ்	புத	வியா	வெ	சனி
அஸ்வினி	சி	சி	சி	ம	அ	அ	சி	சுவாதி	சி	அ	சி	சி	அ	சி	அ
பரணி	சி	சி	சி	சி	சி	சி	சி	விசாகம்	ம	ம	ம	சி	சி	சி	சி
கார்த்திகை	சி	ம	சி	அ	ம	சி	அ	அனுஷம்	ம	சி	சி	சி	சி	சி	சி
ரோகிணி	சி	அ	அ	சி	ம	ம	அ	கேட்டை	ம	சி	சி	சி	சி	ம	சி
மிருகசீரிஷம்	சி	அ	சி	சி	ம	சி	சி	மூலம்	அ	சி	அ	ம	சி	அ	சி
திருவாதிரை	சி	சி	ம	சி	ம	சி	சி	பூராடம்	சி	சி	சி	அ	சி	சி	சி
புனர்பூசம்	சி	அ	சி	சி	அ	சி	சி	உத்திராடம்	அ	ம	சி	அ	சி	சி	சி
பூசம்	சி	சி	சி	சி	அ	ம	சி	திருவோணம்	அ	அ	சி	சி	சி	ம	சி
ஆயில்யம்	சி	சி	சி	சி	சி	ம	ம	அவிட்டம்	ம	சி	சி	ம	சி	சி	சி
மகம்	ம	ம	சி	சி	அ	ம	அ	சதயம்	சி	சி	ம	சி	ம	சி	அ
பூரம்	சி	சி	சி	அ	சி	சி	சி	பூரட்டாதி	சி	ம	ம	அ	சி	சி	ம
உத்திரம்	அ	சி	அ	அ	ம	சி	ம	உத்திரட்டாதி	அ	சி	அ	சி	சி	சி	சி
ஹஸ்தம்	அ	சி	சி	ம	சி	அ	ம	ரேவதி	அ	சி	சி	ம	சி	அ	ம
சித்திரை	சி	சி	சி	சி	சி	சி	ம								

அ = அமிர்தயோகம் சி = சித்தயோகம் ம = மரணயோகம்

ஒரு நாளின் பகல் பொழுது ஐந்து ஆகும்.

முதல் ஆறு நாழிகை	பூர்வான்னம்
12 நாழிகை வரை	பிரதான்னம்
18 நாழிகை வரை	மத்யான்னம்
24 நாழிகை வரை	அபரான்னம்
30 நாழிகை வரை	சாயங்காலம்

ராசிகளின் கதிர்கள் :

மேஷம், விருச்சிகம்	8
ரிஷபம், துலாம்	21
மிதுனம், கன்னி	17
கடகம் 2, சிம்மம்	6
தனுசு, மீனம்	19
மகரம், கும்பம்	10

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சூரிய - நட்பு சந்தி - நட்பு அங்காரகன் -பகை புதன் - நீசம் குரு - ஆட்சி சுக்ர - உச்சம் சனி - நட்பு ரா,கேது - நட்பு	சூரிய - உச்சம் சந்தி - நட்பு அங்காரகன்- ஆட்சி புதன் - நட்பு குரு - பகை சுக்ர - நட்பு சனி - நீசம் ரா, கேது - பகை	சூரிய - பகை சந்தி - உச்சம் அங்கா - நட்பு புதன் - நட்பு குரு - நட்பு சுக்ர - ஆட்சி சனி - நட்பு ரா,கேது - நீசம்	சூரிய - பகை சந்தி - நட்பு அங்கா - நட்பு புதன் - ஆட்சி குரு - நட்பு சுக்ர - நட்பு சனி - நட்பு ரா, கேது - நட்பு
மீனம் - உபயம்	மேஷம் - சரம்	ரிஷபம் - ஸ்திரம்	மிதுனம் - உபயம்
சூரிய - நட்பு சந்தி - சமம் அங்கா - பகை புதன் - நட்பு குரு - நட்பு சுக்ர - நட்பு சனி - ஆட்சி ரா, கேது - பகை	**பன்னிரண்டு ராசிகளில்** **நவக்கிரஹ** **ஆட்சி -உச்சம் -நீச -பகை** **வீடுகள்**		சூரிய - பகை சந்தி - ஆட்சி அங்கா - நீசம் புதன் - நட்பு குரு - உச்சம் சுக்ர - பகை சனி - பகை ரா, கேது - பகை
கும்பம்-ஸ்திரம்			கடகம்-சரம்
சூரிய - பகை சந்தி - சமம் அங்கா - உச்சம் புதன் - நட்பு குரு - நீசம் சுக்ர - நட்பு சனி - ஆட்சி ரா, கேது - நட்பு			சூரிய - ஆட்சி சந்தி - சமம் அங்கா - பகை புதன் - பகை குரு - நட்பு சுக்ர - பகை சனி - பகை ரா, கேது - பகை
மகரம்-சரம்			சிம்மம்-ஸ்திரம்
சூரிய - நட்பு சந்தி - நட்பு அங்கா - பகை புதன் - நட்பு குரு - ஆட்சி சுக்ர - நட்பு சனி - நட்பு ரா, கேது - நட்பு	சூரிய - பகை சந்தி - நீசம் அங்கா- ஆட்சி புதன் - நட்பு குரு - பகை சுக்ர - நட்பு சனி - பகை ரா, கேது - உச்சம்	சூரிய - நீசம் சந்தி - சமம் அங்கா - நட்பு புதன் - நட்பு குரு - நட்பு சுக்ர - ஆட்சி சனி - உச்சம் ரா, கேது - நட்பு	சூரிய - பகை சந்தி - நட்பு அங்கா - நட்பு புதன் - ஆட்சி குரு - நட்பு சுக்ர - நீச்சம் சனி - நட்பு ரா, கேது - நட்பு
தனுசு-உபயம்	விருச்சிகம்-ஸ்திரம்	துலாம்-சரம்	கன்னி - உபயம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாழ்த்துக்களுடன்...

மீனாக்ஷி. சங்கர சர்மா, (ஜோதிட ரத்னா) ஜோதிஷம் & வைதீகம்

ஜாதக ஆராய்ச்சி மையம்
F1. ராஹவேந்திரா ப்ளாட்ஸ்
6/52, வடக்கு ரத வீதி, சிதம்பரம், 608001
e-mail : sankarasharma2007@gmail.com
Sankarasharma @ sancharnet.in

ஜாதக பரிவர்தனை கேந்திரம்
தொலைபேசி : 04144-230121
செல் : 94432 91176
e-mail : sankarasharma@yahoo.com
sankarasharma@operamail.com

இங்கு ஜாதக தோஷங்களுக்கு பரிகார சாந்தி ஹோமங்கள் செய்து தரப்படும் மற்றும் கணபதி, நவக்ரஹ, ஆயுஷ்ய, மஹா சுதர்சன ஹோமங்கள், ஷஷ்டி அப்த பூர்த்தி, பீமரத சாந்தி, க்ரஹப்ரவேசம் கல்யாணம், சாஸ்த்ர வைதீக முறைப்படி செய்து தரப்படும்.

சாஸ்த்ர வைதீக முறைப்படி செய்பவர்கள் மட்டும் அணுகவும்.

ஜாதகங்கள் அஷ்டவர்கம். ராசி குணாகரம் ராசி சமுதாயம் சுப அசுப பலன்கள், நியுமராலஜி, இவை அடங்கிய 40 பக்கங்கள் கொண்ட புத்தகம் பைண்டு செய்து சுவாமி படம் ஒட்டிய நிலையில் தரப்படும்.
ஜாதக ஆராய்ச்சிக்கு 18 நாட்கள் தேவைப்படும். ஜாதக பொருத்தம் ஜாதக நடப்பு பலன்கள் வாக்கிய பஞ்சாங்க முறைப்படி எழுதி கம்யூட்டர் காப்பி எடுத்து தரப்படும்.

வெளியூர் அன்பர்கள் தேதி, நேரம் கேட்டு பதிவு பெற்ற பின் அணுகவும்.
வெளிநாடு அன்பர்கள் e-mail : vishnu_vardhan_s@yahoo.com
என்கிற மெயில் விலாசத்தில் அணுகவும்.

வளர்க குறள் நெறி!

Ph. Off. : 2222100
Res : 2255158

WELCOME CHEMICALS

151, Chinnasubraya Pillai Street, (Chinna Vaikal Street Corner)
Puducherry -1.

Authorised Distributors :

Don Construction Chemicals India Ltd.
An ISO 9001 : 2000 COMPANY

DCP

A Subsidiary of
Don Construction Products Ltd., U.K.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கர வருடத்தில் புதுவையில் சூரியோதய காலம்

மாதம்	1உ	6உ	11உ	16உ	21உ	26உ
சித்திரை	6.03	6.01	5.59	5.56	5.53	5.52
வைகாசி	5.52	5.50	5.50	5.48	5.50	5.50
ஆனி	5.52	5.53	5.54	5.53	5.54	5.56
ஆடி	5.57	5.58	5.59	6.01	6.02	6.03
ஆவணி	6.02	6.03	6.04	6.05	6.04	6.04
புரட்டாசி	6.03	6.02	6.02	6.03	6.02	6.02
ஐப்பசி	6.02	6.03	6.04	6.05	6.07	6.06
கார்த்திகை	6.08	6.09	6.10	6.12	6.14	6.16
மார்கழி	6.24	6.27	6.28	6.30	6.31	6.32
தை	6.32	6.34	6.34	6.35	6.35	6.36
மாசி	6.34	6.32	6.32	6.30	6.26	6.20
பங்குனி	6.18	6.14	6.12	6.10	6.08	6.05

With Best Compliments From :-

SARAVANA TIME CENTRE

All kind of Watches, Clock Sales and Service,
All Recharge Cards, Cell Phones, Cell Phone Covers Available

Proprietor : *A. Velmurugan*

RES :
Plot 227, 2nd Main Road,
Manika Chettiar Nagar
Shanmugapuram, Pondicherry-605 009.
Cell : 9360410964, 93605 43027

OFF :
331, Cuddalore Road,
Nainarmandabam, Pondicherry-605 004.
Cell : 9944914164, 98656 73486

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாண்டிச்சேரி அட்சயா - கர வருஷத்திய சித்திரை மாதம் - 2011

ஆங்கிலம்	தமிழ்	வாரம்	திதி நா - வி	நக்ஷத்திரம்	சிரா. திதி	யோகம்	நேத்	ஜீவன்	மேஷ இருப்பு
14	1	வியா	ஏகா - 31.04	மகம் - 35.32	சூன்	அ.சி	2	0	4.14
15	2	வெள்	துவா - 25.22	பூரம் - 31.40	சூன்	சி	2	1	4.06
